# சம்மாந்துறை பிரதேச சபையின் 20வது கூட்டறிக்கை
# 2019.10.08

சம்மாந்துறை பிரதேச சபையின் 20வது அமர்வு 2019.10.08 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 11. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 19. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 20வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கௌரவ உறுப்பினர் அஸ்வர் அவர்கள் இன்றைய சபை அமர்விற்கு வருகை தர முடியாதென்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு விடுமுறை வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.முஹம்மட் சஹீல் |

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் 01**
சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உள்ளூராட்சி சபைகளின் சம்மேளனக் கூட்டம் இம் மாதம் 3ஆந் திகதி கொழும்பில் நடைபெற்றது. இதில் தவிசாளரும் கலந்து கொண்டார். அச் சபையில் தற்போது உள்ளூராட்சி சபைகளுக்கு இருக்கும் சவால் உள்ளூராட்சி சட்டத்திற்கு பின் உருவாகிய சட்டங்களினால், நிறுவனங்களினால் உள்ளூராட்சி சபைகளில் அதிகாரங்கள் மழுங்கடுக்கப்பட்ட நிலையில் உள்ளது. இதற்கு இச் சபைகள் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற ஒரு நிலைப்பாட்டுக்கு வந்தது. சபைகள் சார்பில் உள்ளூராட்சி சம்மேளனம் ஜனாதிபதி சட்டத்தரணிகளிடம் ஆலோசனை கேட்டு முதன் முதலாக UDA இற்கு எதிராக, இந் நாட்டின் அரசியல் யாப்பை மீறி உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களை தங்கள் வசம் எடுத்துக் கொண்டார்கள். இதில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் சபைகள் எல்லோரும் பங்காளிகளாக மாறி சபைக்குத் துணையாக ஒரு வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்ற ஒரு முடிவை எடுத்து அதற்கு சபைகள் பங்காளிகளாக மட்டுமல்லாமல் இதில் வரும் செலவுகளை அடுத்த வருட வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்க வேண்டும். ஏனென்றால் UDA மட்டுமல்லாமல் மாகாண சபையிலும் இப் பிரச்சினை உள்ளது. இப் பிரச்சினைகளை ஒவ்வொன்றாக சட்ட ரீதியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கௌரவ உறுப்பினர்கள் சபை அமர்வுகளுக்கு மட்டுமல்லாமல் பொது வைபவங்களுக்கு பங்கேற்கும் போது உரிய சீருடையுடன் செல்லாமையினால் சில அசௌகரியங்கள் ஏற்படுகின்றது. எனவே ஏதாவது வைபவத்திற்கு செல்லும் போது உரிய சீருடையுடன் செல்லுவதனால் உறுப்பினர்களுக்கு உகந்தது என்ற ஒரு கருத்து பரிமாறப்பட்டது. அது மாத்திரம் அல்லாமல் தவிசாளர்களும் சபை அமர்வின் போது உரிய சீருடையை அணிந்து அச் சபையை கௌரவிக்க வேண்டும் என்ற ஒரு கருத்தும் பரிமாறப்பட்டது. அச் சீருடையை ஒரு பொதுவான நகர சபை தவிசாளர்களும் அணிகின்றார்கள். அதே போல் பிரதேச சபையின் தவிசாளர்களும் அணியும் போது அப் பதவிக்குரிய அந்தஸ்து வெளிப்படையாக காட்டப்படும். இது தொடர்பாக அவர்கள் ஏற்பாடு செய்துவிட்டு எமக்கு அறிவிப்பார்கள். அதன் பின்னர் நாம் இதனை நடைமுறைப்படுத்தலாம்.

திண்மக் கழிவு அகற்றல் தொடர்பாக அரசாங்கம் ஒரு வர்த்தமானி அறிவித்தல் பிரகடனப்படுத்தியுள்ளது. அதாவது திண்மக் கழிவுகளை வீடுகளில், நிறுவனங்களில் இருந்து எடுக்கும் போது உக்குபவை, உக்காதவை என்று பிரித்தே எடுக்க வேண்டும். இல்லாவிடில் அதனை எடுக்கக் கூடாது. தற்போது அட்டாளைச்சேனையை பொறுத்தவரையில் 100 மில்லியன் பெறுமதியான கொம்போஸ்ட் இயந்திரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ் இயந்திரத்தை இயக்குவதற்கு ஒவ்வொரு நாளும் 50 தொன் உக்கும் கழிவுகள் தேவைப்படுகின்றது. அதனால் சபைகள் பிரிக்காத கழிவுகள் அனுப்பினால் இன்றைக்கு ஒரு தொன்னுக்கு ரூபா 250.00 கட்டணமாக அறவிடுகின்றார்கள். ஆனால் தற்போது ரூபா 100.00 ஆல் அதிகரித்து ரூபா 350.00 வழங்க வேண்டும். ஆனால் கழிவுகளை பிரித்து அனுப்பினால் ரூபா 200.00 அறவிடுவார்கள். நாம் கட்டாயமாக நவம்பர் மாதம் 01ஆந் திகதியில் இருந்து பிரித்து வழங்காத பட்சத்தில் அக் குப்பைகள் அகற்றப்படமாட்டாது என்ற அறிவித்தலையும் மக்களுக்கு தெரிவித்து அதனை நடைமுறைப்படுத்தும் கடமை எமக்கு உள்ளது.

JAICA திட்டம் கிட்டத்தட்ட 06 வருடமாக கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் மாகாண சபையில் இருந்த காலத்தில் இருந்து பேசப்பட்டு, சென்ற மாதம் நிந்தவூரில் எமது அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், தவிசாளர்கள், செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் JAICA திட்டம் சம்மாந்துறையில் 03வது கட்டத்தில் நடைமுறைப்படுத்துவது என்று அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். அதில் நான் தெரிவித்த கருத்துக்கள் என்னவென்றால் JAICA திட்டத்தினால் பல அபிவிருத்தி வேலைகளை நாம் தடை செய்திருக்கின்றோம். 03வது கட்டம் என்பதால் அடுத்த வருட இறுதியிலும் வரலாம். அவ்வாறில்லாவிட்டால் அதற்கு அடுத்த வருடத்தில் வரலாம்.

எனவே திட்டமிட்டு முக்கியமான இடங்களில் அத்திட்டத்திற்கு அமைவாக இவ் அபிவிருத்தி வேலைகளை செய்யாவிட்டால் மக்கள் சபையின் மேல் குற்றஞ்சாட்டுவார்கள். அக் குற்றச்சாட்டு எனக்கும் நேரடியாக நான் தனிப்பட்ட முறையில் செய்கின்றேன் என்று வந்தது. ஆனால் JAICA திட்டத்தில் வீதி மட்டுமல்லாமல் வடிகானும் இணைந்து வருகின்றது. எமது பாராளுமன்ற உறுப்பினர்களின் திட்டத்தில் 02 மில்லியனுக்குள் வீதியும், வடிகானும் செய்வது என்றால் நாம் 50m உம் செய்ய இயலாது. இதனால் இத் திட்டத்தை நாம் இழந்துவிடக் கூடாது. தவிரக்க முடியாத காரணத்தினால் அதனை உள்வாங்கி செய்ய வேண்டிய நிலை இருக்கின்றது.

மட்டக்களப்புத் தரவையில் இருக்கின்ற பொது மைதானத்தில் தற்போது பொது மக்களுக்கும் அதனை பயன்படுத்துகின்ற இளைஞர்களுக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்படுகின்றது. அதாவது விளையாடுகின்ற போது பந்துகள் வீடுகளுக்குள் செல்வதும், கண்ணாடிகள் உடைவதுமாக உள்ளது. தற்போது அப் பிரதேச மக்கள் அவ்விடத்தில் விளையாடக்கூடாது என்று இரவு நேரத்தில் போத்தல்களை உடைத்து மைதானத்தின் எல்லா இடத்திலும் பரப்புகின்றார்கள். இதற்கு நான் இக் கிழமைக்குள் DS, GS, Sports Officer, சபை எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவு எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும். அதாவது மக்களை பாதுகாக்க வேண்டும் அல்லது விளையாடாமல் இருக்க வேண்டும் அல்லது அங்கு அடக்கத்திற்குரிய Volly Ball போன்ற விளையாட்டுக்களை விளையாடலாம். இதற்கு ஒரு தீர்வு எடுக்க வேண்டும்.

இனங்காணப்பட்ட எமது பொது மைதானம் ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத் தொகுதிக்கு பின்னால் உள்ளது. அதில் 02 அல்லது 03 வருடங்களுக்கு முன் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாகாண சபையில் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த போது 10 மில்லியன் ஒதுக்கீட்டில் சில வேலைகளை செய்தார். நாமும் அதனை படிப்படியாக ஒவ்வொரு குழுவுக்குமாக ஒழுங்குபடுத்த வேண்டும். எமக்கு இயலுமானதை செய்து இளைஞர்களை அங்கு சென்று பாவிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும் என்பது எனது கருத்து ஆகும். இது தொடர்பாக அவர்களிடமும் கதைத்துள்ளேன். அதனை வருகின்ற காலத்தில் செயற்படுத்தலாம்.

தேர்தல் காலம் வருகின்றது. பிரதேச சபையின் சொத்துக்கள் எல்லா கட்சிகளுக்கும் சமனான நிலையில் பாவனைக்கு கொடுக்கப்பட வேண்டும் என்ற ஒரு சுற்றறிக்கை இருக்கின்றது. பொது மைதானத்தில் சாதாரணமாக விளையாடுவதற்கு ரூபா 500.00 கொடுக்கின்றோம். பொதுக் கூட்டம் நடைபெற்றால் அடுத்தநாள் அதனை துப்பரவு செய்வதற்கு 05 அல்லது 10 பேர் தேவைப்படுகின்றது. எனவே, விளையாட்டு தவிர்ந்த ஏனைய நிகழ்வுகளுக்கு ஒரு நாளைக்கு ரூபா 5000.00 உம், Deposit ஆக 10,000.00 உம் அறவிட வேண்டும் என்பது எனது கருத்து ஆகும்.

**தீர்மானம் 02**

பொது மைதானத்தில் விளையாட்டு தவிர்ந்த ஏனைய நிகழ்வுகளுக்கு ஒரு நாளைக்கு 5000 ரூபாவும், Deposit ஆக 10,000 ரூபாவும் வாடகையாக அறவிடுவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நேற்று எமது சபையில் வாணி விழா சரஸ்வதி பூஜை வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இதற்கு தலைமைதாங்கி சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்த எமது கௌரவ உறுப்பினர் இன்பவதி அவர்களுக்கு சபையின் சார்பில் நன்றி கூறியவனாக மற்றும் இதற்கு ஒத்தாசையாக இருந்த எமது கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர் வளர்மதி, கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் எல்லோருக்கும் சபையின் சார்பில் நன்றி கூற விரும்புகின்றேன்.

இவ் வருடம் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சம்மாந்துறையின் பெறுபேறுகள் பாரிய ஒரு மாற்றத்தை அடைந்திருக்கின்றது. இதில் முக்கியமாக எமது கௌரவ உறுப்பினர் ஒருவர் தலைமை தாங்கி அவரது முழு முயற்சியினால் மகளிர் வித்தியாலயத்தில் 61 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். இது எமது சபைக்கு பெருமை ஆகும். உங்கள் எல்லோரினது சார்பிலும், இவ் ஊர் மக்கள் சார்பிலும் எமது கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்களை பாராட்டி நன்றி கூற விரும்புகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பொது மைதானத்தை பொறுத்தவரையில் தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் கிரிக்கெட் விளையாடுவது மாத்திரம் சற்று சிரமமானது. எனவே இவ்விடத்தில் உதைப்பந்தாட்டம் விளையாடுவது சிறந்ததாக இருக்கும். தற்போது ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத்தில் உள்ள மைதானத்தில் கிரிக்கெட் விளையாட்டை நடாத்த முடியும். அம் மைதானத்தில் ஒவ்வொரு வாரமும் அப் பிரதேசத்தில் உள்ள கிரிக்கெட் வீரர்கள் விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இதில் இருக்கின்ற முக்கிய விடயம் என்னவென்றால் தற்போது பகலிலே கிரிக்கெட் விளையாடுவதை விட இரவிலே கூடுதலாக விளையாடுவதுதான் இப் பிரச்சினைக்கு முதலாவது காரணம் ஆகும்.

பொது மைதானத்திலே மின்னொளி மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடாத்துவதை தடை செய்தால் இப் பிரச்சினைக்கு நாம் ஒரு தீர்வை காண முடியும். ஏறத்தாள 19 வருடங்கள் நான் அம் மைதானத்தில் விளையாடி இருக்கின்றேன். பகலிலே இவ்வாறான சிரமங்கள் ஏற்படுவதில்லை. ஆனால் இரவு நேரங்களிலே அதுவும் நள்ளிரவை தாண்டி பந்துகள் ஒருவருடைய வளவுக்குள் செல்கின்ற போது அவர்கள் தூக்கத்தில் இருப்பார்கள். அந்நேரம் வேலிகளுக்கு மேலால் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதற்கு ஒரு சந்தரப்பம் இருக்கின்றது. எனவே, அப் பொது மைதானத்தில் மின்னொளி மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடாத்துவதற்கு அனுமதி வழங்கா விட்டால் அம் மைதானத்தில் கிரிக்கெட் விளையாட்டும் விளையாட முடியும் என்பதுதான் எனது கருத்து ஆகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நாம் அதனை தடை செய்வது என்றால் அதற்கு ஒரு மாற்று வழி செய்து அவசரமாக அங்கு உரிய வசதிகளை செய்ய வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வார்கள்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, மின்னொளி மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி விளையாடுவதற்குரிய வெளிச்சத்தை எமது சபையால் கொடுக்க முடியும். அது பாரிய தொகையும் இல்லை, பாரிய செலவீனமும் இல்லை. குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்கு இலங்கை மின்சார சபையிடம் ஒப்பந்த அடிப்படையிலேயே அம் மின் விளக்குகளை பொருத்த வேண்டும். ஆனால் அவ் இடத்தில் தற்காலிகமாகத்தான் பொருத்தப்படுகின்றது. அதனை நாம் நிரந்தரமாக செய்யலாம். இதற்கான மதிப்பீட்டறிக்கைகளை செய்து அப் போட்டிகளை அவ் இடத்தில் நடாத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

LDSP இன்னும் உத்தியோக பூர்வமாக எந்தக் கொடுப்பனவும் வரவில்லை. LDSP இல் Basic, Performance எனும் 02 அம்சங்கள் இருக்கின்றது. Basic மாறாது. ஆனால் Performance நாம் எவ்வளவு விரைவாக பூர்த்தி செய்கின்றோமோ அதற்கு ஏற்றது போல் மாறும். சென்ற மாதம் நடைபெற்ற அமைச்சு செயலாளரின் கூட்டத்தில் சம்மாந்துறையின் Basic Allocation 04 வருடங்களுக்கு 3438000 டொலர் ஆகும். இதை நான்காக பிரித்து 86000 டொலரை ஒரு வருடத்தில் 2 தடவை தருகின்றார்கள். செப்டம்பர் மாதத்தில் வரவேண்டியது இன்னும் வரவில்லை. எனவே இத் திட்டங்களை விரைவாக செய்து முடிக்க வேண்டும்.

வரவு செலவு திட்டம் தொடர்பாக கௌரவ உறுப்பினர்களின் முன்னெடுப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை. எதிர்வரும் 22 ஆந் திகதி விசேட சபைக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்து அதில் எல்லா கௌரவ உறுப்பினர்களும் பங்குபற்றி ஒவ்வொரு அம்சமாக முடிக்கவேண்டும்.

சபை இல்லாத காலத்தில் மல்கம்பிட்டி, அல்லிமூலை சந்தி பாலத்தில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு அவ் ஒப்பந்தத்தில் சபையின் செயலாளர் கையொப்பமிட்டு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. தற்போதும் அவ் விளக்குகள் பாவனையில் இருக்கின்றது. பெப்ரவரி 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை மின் கட்டணமாக 27321 ரூபா செலுத்த வேண்டியுள்ளது. அதனை சபையின் மூலம் செலுத்த வேண்டும்.

**தீர்மானம் 03**

சபை நடவடிக்கைகள் இடம்பெறாத காலத்தில் முகாமைத்துவ குழுவினது தீர்மானம் மேற்கொள்ளாமல் மல்கம்பிட்டி - அல்லிமூலை சந்தி பாலத்தில் அமைக்கப்பட்டுள்ள மின் விளக்குகளுக்கான குறித்த மாதாந்த மின் கட்டணத்தினை நிலுவையுடன் செலுத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சபையின் வளங்கள் குத்தகைக்கு விடுகின்ற போது 02 வருடத்திற்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய வேண்டும். ஆனால் இவ்வளவு காலமும் மதிப்பீடு செய்யவில்லை. தற்போது 2019 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடு வந்துள்ளது. மல்வத்தை கடைகள், பழைய மார்க்கட், ஹிஜ்ராபுரம், வளத்தாப்பிட்டி போன்றவற்றில் மாற்றங்கள் இருக்கின்றது. அதனை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

**தீர்மானம் 04**

திறந்த வெளி பொதுச் சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்காக 2020 ஆம் ஆண்டில் ஏலத்தில் விடுவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 05**

வளத்தாப்பிட்டி, மல்வத்தை, ஹிஜ்ரா புரம், பழைய மார்க்கட் ஆகியவற்றில் அமைந்துள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான கடைகளுக்கான அரசாங்க விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட வாடகைகளை நடைமுறைப்படுத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர்.வளர்மதி |

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வங்கிகளைப் பார்த்தால் தனியார் வங்கிகளும் அரச வங்கிகளும் போட்டி போட்டு வேலைகளை செய்கின்றது. மக்கள் ஏன் ஒதுங்குகின்றார்கள் என்று பார்த்தால் இங்கு இருக்கின்ற அரச ஊழியர்கள் இவ் விடயத்தில் மக்களுக்கு சரியான முறைக்கு தெளிவின்மையையும், வேலையை துரிதமாக செய்து கொடுக்கின்ற மனப்பான்மையும் உருவாகவில்லை. நாம் மக்களால் தெரிவு செய்யப்பட்டு வந்து இச் சபையை நிர்வகித்துக்கொண்டிருக்கின்றோம். ஒரு வீடு கட்டுவதற்கு சட்ட ரீதியாக நடைமுறையில் இருக்கின்ற சிக்கலை பல பேர் என்னிடம் முறையிட்டுள்ளார்கள். நேற்று மபாஸா பாடசாலைக்கு அருகில் ஒருவர் வடிகானுக்குள் இருந்து எடுத்து அத்திவாரம் போடுகின்றார். நான் கேட்ட போது அதற்கு அனுமதி தந்திருக்கின்றார்கள் என்று கூறினார். பௌஸி மாவத்தை வீதியில் ஒருவர் கடை கட்டுகின்றார். அவர்களுக்கு விளங்க வேண்டும் பாதையோரத்தில் சட்டபூர்வமாக ஒரு கட்டடம் கட்டப்பட்டு அது உடைக்கப்படும் என்றால் அதற்கு நஸ்ட ஈடு பெறலாம். இப்படியான விதி முறைகள் இருக்கும் போது மக்கள் அதனை தவிர்த்துக் கொள்ளலாம்.

**கௌரவ உறுப்பினர் எம். எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இக் கட்டிட விடயம் தொடர்பாக 08 ஆம் மாதம் நடைபெற்ற சபையின் போது நான் ஒரு தீர்மானம் தந்தேன். அதாவது ஒலி பெருக்கி மூலம் மக்களுக்கு அறிவித்தல் கொடுத்து அது தொடர்பாக கட்டப்பட்ட கட்டடம் தொடர்பாக தெரியப்படுத்த வேண்டும் என்று அது இதுவரைக்கும் நடைபெறவில்லை. அக் கட்டடம் கட்டிட உரிமையாளர் இக் காரியாலயத்தில் எனது பெயரைக் குறிப்பிட்டு இவர்தான் இக் கட்டடத்தை தடுத்திருக்கின்றார் என்று எனது அயல் வீட்டாருடன் பேசாதளவுக்கு இதை குறிப்பிட்டிருக்கின்றார்கள். தற்போது இக் கட்டடம் தடைபடாமல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இக் காரியாலயத்தில் இருக்கின்ற அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் சபை உறுப்பினர் என்றால் அதனை பேணிப் பாதுகாக்க வேண்டும் எனும் விடயத்தை கட்டாயப்படுத்த வேண்டும். பெண்கள் கதைப்பதை புறந்தள்ளி விடுகின்றார்கள். இப்படி பெண்கள் கதைப்பதை புறந்தள்ளி விடுவது என்றால் ஆசிரியர் தொடக்கம் வைத்தியர் வரைக்கும் எல்லா இடத்திலும் பெண்கள் தலைமைத்துவம் கொண்டிருக்கின்றார்கள். ஒரு கூட்டத்திற்கு சென்றாலும் பெண் உறுப்பினர்களுக்கு பின்னுக்கு இடம் ஒரு கணக்காளர் பெண் இருந்தால் அவர்களுக்கு முன்னுக்கு இடம். ஏன் அது வரவேண்டும்? இப்படியான பின் தங்குதல் வரக்கூடாது?

ஏனென்றால் அண்மையில் கட்சித் தலைவரும் சட்ட முதுமானியுமான நீர் வழங்கல் வடிகால் அமைச்சின் உயர் கல்வி அமைச்சர் அல் ஹாஜ் கௌரவ ரவூப் ஹக்கீம் அவர்கள் பெண்களுக்கான ஆளுமையையும், பெண்களுக்கான தலைமைத்துவத்தையும் உள்வாங்க வேண்டும் என்பதில் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தி பேசி இருக்கின்றார். சபையில் மட்டும் இல்லாமல் எந்தவிதமான அழைப்பிதழ்களும் வந்து ஏதாவது ஒரு நிகழ்ச்சி நடக்கின்ற போது நான் நேரத்துடன் சமூகமளித்தும் கூட அக் காரியாலயத்தில் வேலை செய்கின்ற உறுப்பினர்களுக்கு பெயர் இடப்படுகின்றது. ஆனால் ஏனையவர்களுக்கு பெயர் இடப்படுவதில்லை. அதே வரிசையில் எங்களுக்கும் அவ்விடம் ஒதுக்கப்பட வேண்டும். பெண்கள் என்று வருகின்ற விடயத்தில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும் என்று சபையூடாக கௌரவ தவிசாளர் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்கள் விளங்க வேண்டும். இச் சபையில் எந்தவொரு வித்தியாசமும் இல்லாமல் பெண்களுக்கு இல்லை என்று சொல்வதற்கு இடமில்லை. ஆனால் பொது வைபவங்களில் ஏனைய நிறுவனங்களால் செய்யப்படுகின்ற போது சில குறைபாடுகள் வருகின்றது. இதற்கு முக்கியமான காரணம் நாம் உரிய நேரத்திற்கு செல்லாமல் இருப்பது ஆகும். நாம் உரிய நேரத்திற்கு செல்லும் போது விரும்பிய இடத்தில் இருக்கலாம். இவ் ஊரில் உள்ள பிரச்சினை என்னவென்றால் ஒருவரும் ஒரு Protocol யையும் மதிக்கின்றார்கள் இல்லை. உள்ளூராட்சி சபைகளுக்கு இருக்கின்ற சட்டரீதியான பிரச்சினை என்னவென்றால் National Protocol இல் உள்ளூராட்சி மன்ற தவிசாளர்களுக்கும் இவ் இடத்தில் வர வேண்டும் என்ற வரையறை இல்லை. சட்டப்படியாகவோ அல்லது சுற்றறிக்கை அனுப்பியோ நாம் இதனை செய்ய இயலாது. கௌரவம் வழங்கப்பட வேண்டும் என்பதை தவிர இப்படித்தான் செய்ய வேண்டும் என்று நான் கூற இயலாது. ஏனென்றால் Protocol இல் இல்லை.

கௌரவ உறுப்பினர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் இடையில் கதைக்கின்ற விடயத்தில் மன கசப்புக்கள் ஏற்படுகின்றது. நான் இரண்டு பக்கத்திலும் கேட்க வேண்டும். நான் உங்களுக்கு தலைமை தாங்குபவன் மற்றும் இந் நிறுவனத்தின் தலைவன். உங்களின் தேவைகளை என்னிடம் பேசுங்கள் இல்லாவிட்டால் செயலாளரிடம் பேசுங்கள். சில நேரம் நேரடியாக சென்று அவர்களிடம் நீங்கள் சொல்லுகின்ற விடயம் சரியாக இருந்தாலும் அவர்கள் கேட்கின்ற விதம் பிழையாக இருந்தால் அவர்களின் பதிலும் பிழையாக வருகின்றது. கௌரவ உறுப்பினர்களின் கௌரவத்தையும் பாதுகாக்க வேண்டும் அதே போல் ஊழியர்களையும் பாதுகாக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சபைக்கு வருமானத்தை திரட்டக்கூடிய ஒரு விடயம் வரி அறவீடு செய்வது ஆகும். என்னுடைய கருத்து தற்போது நடைமுறையில் இருக்கின்றவர்களை விட மேலதிகமாக 02 அல்லது 03 ஊழியர்களை நியமிக்க வேண்டும். ஏனென்றால் 3.5 மில்லியன் என்பது எமக்கு வரவேண்டிய பாரிய தொகை ஆகும். நாம் பாராட்ட வேண்டிய விடயம் 02 ஊழியர்கள் அதிலும் தற்காலிக அடிப்படையிலே வேலை செய்கின்ற ஒருவர் இந்தளவுக்கு முயற்சி செய்திருக்கின்றார். அரச உத்தியோகத்தர்கள் அதில் கருணை செலுத்துவது குறைவாக இருந்தாலும் அவர்களும் வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அவர்களுடைய 08 மணி நேரம் முடிவடைந்தால் அவர்களுக்கு எவ்வாறாயினும் சம்பளம் கிடைக்கும் என்பது ஒரு கருத்து உள்ளது. நாமும் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டிய கருத்து ஆகும். நாம் இவ் வரியை கூடுதலாக அறவிட வேண்டுமாக இருந்தால் மேலதிகமான ஊழியர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களுக்கான மேலதிக கொடுப்பனவை வழங்கக் கூடிய ஒரு முடிவை சபையூடாக எடுத்தால் வரி அறவீட்டினை நாம் துரிதமாக மேற்கொள்ளலாம்.

எமது சபையின் பராமரிப்பில் உள்ள எமது சபைக்கு வருமானம் தரக்கூடிய ஒரு சொத்து ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதி ஆகும். அண்மையில் ஒரு பாடசாலையினுடைய இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. நானும் அங்கு சென்றிருந்தேன். அவ் இடத்தை பராமரிப்பதற்குரிய ஊழியர்கள் அவ் இடத்தில் இல்லை. குறிப்பிட்ட ஊழியர்கள் இருக்கின்றார்கள் அவர்கள் சபையிலே ஒரு உறுப்பினர் என்கின்ற வகையில் கூறினார்கள். அவ் இடத்தில் ஊழியர்கள் இல்லை. அவ் வேலைகளை செய்து கொண்டிருப்பவர்களும் அலுவலக உதவியாளர்கள். அவர்களுடைய கருத்தின் படி தாங்கள் தான் இதையெல்லாம் செய்து கொண்டிருக்கின்றோம். இவர்களுடைய கருத்துக்களை உள்வாங்கியவனாக இருந்தாலும் அவ்விடத்திலே நான் கண்டுகொண்டதன் பிரகாரம் அது எமக்கு வருமானம் செலுத்தக் கூடிய ஒரு இடம் ஆகும். அதனை பராமரிக்க வேண்டிய பொறுப்பும் உள்ளது. அவ் இடத்தின் பெயருக்கும் அவ் இடத்தில் இருக்கின்ற கட்டடங்களின் பெறுமதிக்கும் அங்கு சென்று பார்க்கின்ற போது அந்த பிரகாசம் இல்லை. ஆகவே அவ்விடத்தை பராமரிக்க வேண்டும்.

ஜனாதிபதி விளையாட்டுக் கட்டடத்தில் இருக்கின்ற நீச்சல் தடாகத்தை பராமரிக்கக் கூடியவர் விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடாக நியமனம் பெற்று வந்தவர். எமது சபையிலே உள்ள 01 அல்லது 02 பேரை அதற்கு பயிற்றுவித்து இவ் வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எமது சபையில் உள்ள ஊழியராகவே இருக்க வேண்டும் என்று நினைக்கின்றேன். அதே போன்று உடற்பயிற்சி செய்கின்ற அனைத்து உபகரணங்களும் தற்போது செயலிழந்து இருக்கின்றது. ஓரிரு உபகரணங்கள் இருக்கின்றது மிகவும் பெறுமதி வாய்ந்தது. அதனை பராமரிப்பதற்கும் சரியான இடமும் இல்லை சரியான ஊழியர்களும் இல்லை என்பது கவலைக்குரியதாக இருக்கின்றது. அவ் இடத்தை எதிர்வருகின்ற வரவு செலவு திட்டத்தில் அவ் இடத்திற்கு போதுமான நிதியை ஒதுக்கி அதனை திருப்திகரமான இடமாக மாற்ற வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதி தொடர்பாக பல தடவை கதைத்துள்ளேன். சென்ற மாதம் நானும் செயலாளரும் சென்று சட்டபூர்வமாக அந் நிலத்தை சபைக்கு மாற்றுவதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுத்து பிரதேச செயலகத்திற்கு பாரம் கொடுத்துள்ளோம். நிலம் எமக்கு வந்தவுடன் கட்டடமும் எமக்கு வருகின்றது. ஏனென்றால் கட்டடம் மாற்றம் செய்யும் போதுதான் இப் பிரச்சினைகள் வருகின்றது. எமது அமைச்சின் செயலாளர் ஜனாப் அஸீஸ் அவர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்கள் எல்லோரும் சபைக்கு ஆதரவு வழங்கி தற்போது Document காணி அமைச்சுக்கு சென்றுள்ளது. அந்த Document வந்தால் கௌரவ உறுப்பினர் கூறியது போல் அடுத்த வருட வரவு செலவுத் திட்டத்தில் அதற்குரிய திட்டங்களை செய்யலாம்.

**தீர்மானம் 06**
சென்ற மாதம் 2019.09.02 தொடக்கம் 2019.09.30 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

**தீர்மானம் 07**
IDPs/உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்வரும் வேலைகளை செயற்படுத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

1. Construction of Concrete Road & Drainage at Mil Road West - 2 Mn
2. Construction of Concrete Vipulananda Road - 2 Mn
3. Construction of Concrete to Kurujamani Road - 2 Mn
4. Completion work of Jamaliya Mosque - 2 Mn
5. Construction of Library Building at Veeramunai - 12.70 Mn

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம்.ஜிப்ரி |

**தீர்மானம் 08**
கோரக்கர் கோவில் வீதி, பழைய அலுவலக வாகனத் தரிப்பிடம் என்பவற்றை திருத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

**தீர்மானம் 09**
உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட இரண்டு வேலைத்திட்டங்களை சனசமூக நிலையங்கள் ஊடாக வழங்கி நடைமுறைப்படுத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

1. Construction of Toilet at Amir Ali Library
2. Construction of office Room & Toilet (Stage – 02) at Composed Yard

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ தவிசாளர் மற்றும் கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்கியவளாக, இந் நீச்சல் தடாகத்தை சிறுவர்களுக்கு, பெரியவர்களுக்கு என்று அதனை அடையாளப்படுத்த வேண்டும். ஏனென்றால் அங்கு மொத்தமாகத்தான் காணப்படுகின்றது. எனவே, அதனை அடையாளப்படுத்த வேண்டும். நான் சென்ற வாரம் சிறுவர் தினத்தன்று நிந்தவூருக்கு சென்று அங்குள்ள சிறுவர் பூங்காவை பார்த்த போது திருப்தியாக இருந்தது. ஆனால் அதே தினம் சம்மாந்துறை பிரதேச சபையினுடைய சிறுவர் பூங்காவை பார்த்த போது கவலைக்குரிய இடமாக இருந்தது.

ஏனென்றால் இங்கு வயல் பக்கம் அமைக்கப்பட்டுள்ள வேலி கம்பிகளாலும், புடவைகளாலும் வரையப்பட்டு அதனை தொட்டால் விழுகின்ற நிலையில் உள்ளது. அது சிறுவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. அது மாத்திரமல்லாமல் மத்திய வீதியில் அமைக்கப்பட்டுள்ள வேலியும் உயரம் இல்லாமல் இருப்பதனால் இலகுவாக சிறுவர்கள் அதனை கடந்து வருகின்றார்கள். எனவே அதனை உயர்த்த வேண்டும்.

சிறுவர் பூங்காவை பராமரிக்கும் நிர்வாகத்தவர்களிடம் ஏன் இந்த Bench மண்ணுடன் கிடக்கின்றது என்று கேட்டேன். அதற்கு அவர் கூறிய பதில் என்னவென்றால் மண் போட்டதால் மண்ணுடன் சேர்ந்துவிட்டது என்று கூறினார்கள். நான் அவ் Bench உயர்த்த வேண்டும் என்ற கருத்தை வைத்துக் கொண்டுதான் கேட்டேன். ஆனால் அந்த Bench உயர்த்தப்படவில்லை. பெண்களும் ஆண்களும் அரை மதில்களில் ஏறிக்கொண்டிருக்கிறார்கள். பின்னர் இரவிலும் சென்று பார்த்திருக்கின்றேன். பெரியவர்கள் சாப்பிடுவதும், சிகெரட் குடிப்பதுமாக உள்ளது. அது சிறுவர் பூங்கா சிறுவர்கள்தான் பாவிக்க வேண்டும். உடைந்த பொருட்களும் அதற்குள்ளே காணப்படுகின்றது அவற்றை அகற்றி Bench களை உயர்த்தி அதனை அழகுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

வரவு செலவுத் திட்டம் அமைக்கும் போது இங்கு இருக்கின்ற நிதிக் குழுக்களையும் உள்வாங்கினால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

சம்மாந்துறையில் வீதி அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றதன் காரணமாக 02 பஸ் தரிப்பிடங்கள் உடைக்கப்பட்டுள்ளது. தற்போது சிறுவர்கள், வயோதிபர்கள், பெண்கள் அனைவரும் வெயிலிலும், மழையிலும் கஸ்டப்படுகின்றார்கள். சபையில் இருக்கின்ற அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி பஸ் தரிப்பிடங்களை அமைக்க வேண்டும். மற்றும் சென்ற கூட்டறிக்கை திருத்தப்பட்டது. அது எங்களுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
திருத்தப்பட்ட கூட்டறிக்கைகள் இருக்கின்றது. அது தேவை என்றால் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையில் புலமைப்பரிசில் பரீட்சையில் 170 இற்கு மேற்பட்ட பிள்ளைகள் சித்தியடைந்தது எமது சபைக்கும் பெருமை மற்றும் சம்மாந்துறை மக்களுக்கும் பெருமை ஆகும். ஆனால் வலயக்கல்வி அலுவலகமும் பாடுபட்டதை நினைத்து சந்தோசப்படுகின்றேன். பல்கலைக் கழகங்களுக்கு சென்ற மாணவர்களை கௌரவித்தது போல் இம் மாணவர்களுக்கும் கௌரவம் வழங்கலாம் என்று நினைக்கின்றேன்.

நான் எனது தனி முயற்சியினால் விசேட தேவைகளையுடைய மாணவர்களுக்காக 15 மில்லியன் கொண்ட கட்டடம் ஒன்றை ஜப்பான் தூதுவராலயம் ஊடாக நிதி ஒதுக்கி தற்போது வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றது என்பதை இச் சபையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வீதிகளுக்கு பெயரிடுதல் தொடர்பாக நாம் இன்னும் அடுத்த கட்டத்தை நோக்கி நகரவில்லை. 20 மாதங்கள் கடந்து விட்டோம். எனவே அதனை முன்னெடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால் தற்போது மின்சார சபையினால் வழங்கப்பட்ட இக் கடிதத்தில்கூட மல்காம்பிட்டி தீகவாபி வீதி சம்மாந்துறை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
RDA பதிவுகளில் அவர்கள் வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்ட பெயர்கள்தான் இருக்கின்றது. உதாரணமாக மல்லிகைதீவு வீதி உண்மையில் அது மல்லிகைதீவு வீதி இல்லை. அதற்கு வேறு பெயர் உண்டு. RDA வீதி என்பதால் நாம் செய்ய இயலாது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கிழக்கு மாகாண கௌரவ ஆளுனர் அவர்களிடம் தைக்காப்பள்ளியில் ஒரு பஸ் தரிப்பிடத்தை அமைக்குமாறு வேண்டுகோள் விடுத்து கிட்டத்தட்ட 05 மாதங்கள் கடந்துவிட்டன. கிழக்கு மாகாண போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு தாங்கள் திருகோணமலைக்கு செல்லுகின்ற சந்தர்ப்பத்திலே அவ் வேண்டுகோளை கூறுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவ் வேண்டுகோளை கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களும் கேட்டிருக்கின்றார்கள். தைக்காப்பள்ளி பஸ் தரிப்பிடத்தை மீண்டும் நிறுவ வேண்டிய பொறுப்பு தைக்காப்பள்ளி நிருவாகத்திற்கு இருக்கின்றது. ஏனென்றால் அவ்விடத்தில் ஒரு பஸ் தரிப்பிடம் வர வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது வளத்தாப்பிட்டி வட்டாரத்தின் இஸ்மாயில் புரம் கிராமம் என்பது செம்பிறை இயக்கத்தினால் அமைக்கப்பட்ட வீட்டுத்திட்டமாகும். அதன் கொந்தராத்துப் பணிகள் ஒவ்வொரு அமைப்புகளுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. அதில் வடிகான் அமைத்தல் ஒரு நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டது. அவ் வடிகான்கள் எவ்வித கம்பிகளும் வைக்கப்படாமல் V வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அவ் வீதிகளில் குறுக்கறுக்கின்ற போது பாலங்கள் போடப்பட்டிருக்கின்றது. இரண்டு பக்கங்களிலும் 2அடி Slab போட்டுவிட்டு நடுவிலே 16அடிக்கு ஒரு Slab யை போட்டிருக்கின்றார்கள். அதனுள் மண் எடுக்கவோ, அதனூடாக எந்தவித வேலைகளும் செய்ய இயலாமல் இருக்கின்றது. எல்லா வடிகான்களும் தற்போது நிரம்பி நீர் வீதிகளை உடைத்து செல்கின்றது.

அது மட்டுமல்லாமல் நீர் வடிகாண்களில் தங்குவதால் துர்நாற்றம் வீசுகின்றது. ஒரு கட்டத்தில் டெங்கு நோயாளிகள் ஒரு சிலர் அடையாளப்படுத்தப்பட்டு பின்னர் எமது சபையின் ஊழியர்களைக் கொண்டு துப்பரவு செய்து சீர்செய்தோம். தற்போது அதே போன்ற நிலை ஏற்பட்டுள்ளது. அவ் வடிகான்கள் அத்தனையும் துப்பரவு செய்யப்பட வேண்டும். 16அடி Slab இன் நடுப்பகுதியை வெட்டி 2அடி Slab ஐ போட்டு அதனை தூக்கக்கூடிய ஏற்பாட்டை சபை மூலமாக செய்ய வேண்டிய தேவையாக இருக்கின்றது. அவ் வேலைகளை செய்வதற்கும் JCB மற்றும் 04 தொழிலாளிகளை 03 நாட்களுக்கு தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வளத்தாப்பிட்டி தபால் அலுவலகம் தொடர்பாக நாம் தொடர்ந்து பேசி வருகின்றோம். அதன் கூரை முற்றுமுழுதாக உடைந்து பயன்பாடற்ற நிலையில் இருக்கின்றது. அதனையும் சீர் செய்வதற்கு ஒரு ஏற்பாட்டை செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

பஸ் தரிப்பிடம் தொடர்பாக கிழக்கு மாகாண போக்குவரத்து ஆணைக்குழுவிடம் நான் பல முறை வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன். எமது மல்வத்தை BOC அருகில் பஸ் தரிப்பிடம் ஒன்று இருந்தது. அது வீதி அபிவிருத்தி வேலைகள் காரணமாக உடைக்கப்பட்டுள்ளது. மக்கள் பஸ் ஏறுவதற்கு அத்தியவசியமாக ஒரு பஸ் தரிப்பிடம் தேவை. அதே போன்று வளத்தாப்பிட்டி அரச தமிழ் பாடசாலை அருகில் ஒரு பஸ் தரிப்பிடம் இருந்தது. அதுவும் தற்போது உடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. கிழக்கு மாகாண போக்குவரத்து ஆணைக்குழு செய்து தரும் என்று உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

ஏனெனில் அங்கு சென்று பணிப்பாளர் அவர்களையும் தொடர்பு கொண்டு கேட்டபோது அம்பாரை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, சம்மாந்துறை பிரதேசங்களுக்கு ஒரு சில பஸ் தரிப்பிடங்களை கடந்த வருடத்திற்கு முந்திய வருடத்தில் வழங்கினோம். ஆனால் அதனை கொந்தராத்துக்காரர்கள் முடிக்கவில்லை. நாங்கள் இன்னும் சம்மாந்துறைக்கு எந்தவொரு பஸ் தரிப்பிடங்களை தருவதற்கான ஏற்பாடுகள் இல்லை. இவ்வருடம் 03 பஸ் தரிப்பிடங்களை அனுமதித்துள்ளோம் என்று கூறினார்கள். எனவே, எமது சபையின் நிதி மூலம் வளத்தாப்பிட்டி, மல்வத்தை பஸ்

தரிப்பிடங்களை அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். வளத்தாப்பிட்டி குளத்திலே யானைகள் அன்றாடம் வருகைதந்து நீர் அருந்துவதும், ஊரை தாக்குவதுமாக இருந்து கொண்டிருக்கின்றது. ஆனால் அது ஒரு அழகான காட்சியாகவும் இருக்கின்றது. அதனை ஒரு சுற்றுலாத்தளமாக மாற்றுவதற்கு அவ்விடத்தில் யானைகளை பார்க்க முடியும் என்ற பெயர்பலகையை வைத்தோம் என்றால் எதிர்காலத்தில் எமக்கு ஒரு உள்ளூர் சுற்றுலாத் தளமாக மாறக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. எனவே அவ்விடத்தில் 02 பெயர்பலகைகளை வைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, புலமைப்பரிசில் பரீட்சையில் அல் அர்சத், செந்நெல் சாஹிரா, அஸ்ஸமா, அல் ஹம்ரா, ஹிஜ்ரா புரம் போன்ற பாடசாலைகளில் மாணவர்கள் இப் பரீட்சையில் சித்தியடையவில்லை. இப் பிரதேசங்கள் பின் தங்கிய பிரதேசங்கள் ஆகும். இப் பிரதேசத்தில் சித்தியடைகின்ற மாணவர்கள் அனைவரும் புலமைப் பரிசில் பணம் கிடைக்கக்கூடிய தகுதியுடையவர்கள் ஆகும். நாம் இப் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை இனங்கண்டு எமது சபையால் அதற்கு ஏதாவது முயற்சிகள் செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சென்ற சபையில் இதற்கு முக்கிய கவனம் செலுத்தி பின் தங்கிய பாடசாலைகளை ஊக்குவிக்க வேண்டும் என்று கூறினோம். 5ம் ஆண்டு புலமைப்பரிசில் திட்டம் ஒரு சர்ச்சைக்குரியது. இதில் ஆசிரியர் என்ற ரீதியிலும் ஒரு பெற்றோர் என்ற ரீதியிலும் அது பல குடும்பங்களில் மட்டுமில்லாமல் சில மாணவர்களின் மனோநிலை தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதனால் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் திட்டங்களுக்கு நான் கொண்டாடுவதற்கு விரும்புவதில்லை. ஏனென்றால் ஒருவகையில் நாம் கொண்டாடுகின்ற சதவீதம் குறைவு. இதன் தாக்கத்தினால் பெற்றோர்கள் பிள்ளைகளிடம் வெறுப்பை காட்டுகின்றார்கள். கௌரவ உறுப்பினர் அவர்கள் கூறியது போல் இப் பின் தங்கிய பாடசாலைகளை நாம் கவனிக்க வேண்டும். பின் தங்கிய பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் வீட்டுகளுக்கு சென்று அப் படிப்புகளை தொடராமல் அவர்களின் வயிற்றுப் பசிக்காக வேறு வேலைகளை செய்கின்றார்கள். ஆனால் மகளிர் வித்தியாலயம் மற்றும் ஏனைய பாடசாலை மாணவர்கள் பாடசாலையை விட்டு வீடுகளுக்கு சென்றும், வகுப்புகளுக்கு சென்றும் படிக்கின்றார்கள்.

எனவே இவ்விடத்தில் நாம் என்ன ஆக்கபூர்வமான வேலைகளை செய்ய வேண்டும். அதாவது அப் பாடசாலை நிர்வாகத்திற்கு ஒரு பொறுப்பு இருக்க வேண்டும். இவ் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்கின்ற பிள்ளைகள் தொடர்பாக தொடர்ந்தும் பேசி வருகின்றோம். நான் புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை பார்ப்பது எத்தனை சமுர்த்தி மாணவர்கள் சித்திபெறுகின்றார்கள் என்பதற்காக ஏனென்றால் அதுதான் எமக்கு வெற்றி ஆகும். வசதி உள்ளவர்களின் பிள்ளைகள் சித்திபெறுவது திறமை அல்ல. ஏழைக் குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் சித்திபெறுவதுதான் திறமை. இப் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை இனங்கண்டு அப் பாடசாலைகளுக்கு என்ன வேலைத்திட்டங்களை செய்ய வேண்டும் என்று அடுத்த வருட வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கி செய்ய வேண்டும். எமது இலக்கு எத்தனை சமுர்த்தி மாணவர்கள் சித்திபெறுகின்றார்கள் என்பது ஆகும். தற்போது சித்திபெற்றவர்களில் 180 இற்கு மேற்பட்டவர்கள் வசதி உள்ளவர்கள். இவர்களுக்கு இந்த Allowance கிடைக்கமாட்டாது. எனவே இதற்கான தீர்வை நாம் எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்த சாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஜமாலியா பாடசாலையில் பல வருடங்களாக புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாமல் இருந்தது. ஆனால் தற்போது கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்கள் தனது சொந்த பணத்தில் செலவு செய்து 10 மாணவர்களில் 01 மாணவர் சித்தியடைந்துள்ளார். ஏனைய 09 மாணவர்களும் 100 இற்கு மேல் புள்ளிகளை பெற்றிருக்கின்றார்கள். இதில் முயற்சி செய்த எமது கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம். எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஒக்டோபர் 7ம் திகதி ஆசிரியர் தினம் கொண்டாடினோம். இதில் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் ஒரு பாராட்டு விழா செய்யலாம் என்று நினைக்கின்றேன். ஏனென்றால் அண்மையில் எனது வகுப்பாசிரியரை சந்தித்தேன். நாங்கள் கல்வி கற்கும் வரைதான் ஆசிரியர்கள் ஓய்வு பெற்று சென்ற பின்னர் பாராட்டுவதற்கோ, கவனிப்பதற்கோ யாருமில்லை என்று மனம் உடைந்த நிலையில் கூறியது எனக்கு மிகவும் மனவருத்தமாக இருந்தது. ஓய்வு பெற்றவர் என்று ஒதுக்கி விடாமல் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்தால் சந்தோசமடையலாம் என்று நினைக்கின்றேன். மற்றும் க.பொ.த சாதாரண தரப்பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பை ஏற்படுத்துவதற்கு ஒரு விழிப்புணர்வை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமக்கு என்று ஒரு Act இருக்கின்றது. அதற்குள் நாம் எமது கடமையை பூர்த்தி செய்ய வேண்டும். ஏனையவைகள் எல்லாம் எமது திணைக்களத்திற்கு அப்பாற்பட்டவைகள் ஆகும். சில விடயங்களை செய்யலாம். ஆனால் எமக்கு ஒரு வரையறை உள்ளது.

சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மின் விளக்குகள் மற்றும் மின் விளக்குகள் பொருத்துதல் தொடர்பாக எமது டுநவவநச ர்நயன பத்திரத்தில் எழுதி தங்களுக்கு அனுப்பிய பின்னர் அதனை ஆவணை செய்து மின்னியளாலர் அல்லது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் கையளிக்கின்றீர்கள். அதன் பிற்பாடும் தங்களை அனுக வேண்டிய தேவை இருக்கின்றதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் உள்ள பிரச்சினை மக்களின் வேண்டுகோளை உமது வேண்டுகோளாக போடுகின்றீர்கள்.